فَإِنْ عَصَوْكَ فَقُلْ إِنِّي بَرِيٓءٌ مِّمَّا تَعْمَلُونَ ﴿٢١٦﴾ وَتَوَكَّلْ عَلَى الْعَزِيزِ
الرَّحِيمِ ﴿٢١٧﴾ الَّذِي يَرٰىكَ حِينَ تَقُومُ ﴿٢١٨﴾ وَتَقَلُّبَكَ فِي السّٰجِدِينَ ﴿٢١٩﴾
إِنَّهُ هُوَ السَّمِيعُ الْعَلِيمُ ﴿٢٢٠﴾ هَلْ أُنَبِّئُكُمْ عَلٰى مَنْ تَنَزَّلُ الشَّيٰطِينُ ﴿٢٢١﴾
تَنَزَّلُ عَلٰى كُلِّ أَفَّاكٍ أَثِيمٍ ﴿٢٢٢﴾ يُلْقُونَ السَّمْعَ وَأَكْثَرُهُمْ كٰذِبُونَ ﴿٢٢٣﴾
وَالشُّعَرَآءُ يَتَّبِعُهُمُ الْغَاوٗنَ ﴿٢٢٤﴾ أَلَمْ تَرَ أَنَّهُمْ فِي كُلِّ وَادٍ
يَهِيمُونَ ﴿٢٢٥﴾ وَأَنَّهُمْ يَقُولُونَ مَا لَا يَفْعَلُونَ ﴿٢٢٦﴾ إِلَّا الَّذِينَ اٰمَنُوا
وَعَمِلُوا الصّٰلِحٰتِ وَذَكَرُوا اللّٰهَ كَثِيرًا وَّانْتَصَرُوا مِنْ بَعْدِ مَا
ظُلِمُوا ۗ وَسَيَعْلَمُ الَّذِينَ ظَلَمُوٓا أَيَّ مُنْقَلَبٍ يَّنْقَلِبُونَ ﴿٢٢٧﴾ ع ١١ ٣٦ ١٥

سورة النمل مكية وهي ثلث وتسعون اٰية وسبع ركوعات

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

طٰسٓ ۚ تِلْكَ اٰيٰتُ الْقُرْاٰنِ وَكِتَابٍ مُّبِينٍ ﴿١﴾ هُدًى وَّبُشْرٰى
لِلْمُؤْمِنِينَ ﴿٢﴾ الَّذِينَ يُقِيمُونَ الصَّلٰوةَ وَيُؤْتُونَ الزَّكٰوةَ وَ
هُمْ بِالْاٰخِرَةِ هُمْ يُوقِنُونَ ﴿٣﴾ إِنَّ الَّذِينَ لَا يُؤْمِنُونَ بِالْاٰخِرَةِ
زَيَّنَّا لَهُمْ أَعْمَالَهُمْ فَهُمْ يَعْمَهُونَ ﴿٤﴾ أُولٰٓئِكَ الَّذِينَ
لَهُمْ سُوٓءُ الْعَذَابِ وَهُمْ فِي الْاٰخِرَةِ هُمُ الْأَخْسَرُونَ ﴿٥﴾

216. ஆகவே உமக்கு அவர்கள் மாறு செய்தால், "நிச்சயமாக நீங்கள் செய்வதைவிட்டும் நான் நீங்கியவன்" என்று கூறுவீராக!
217. (யாவரையும்) மிகைத்தவனாகிய, மிகக்கிருபையுடையவனின் மீது (சகலத்தையும் ஒப்படைத்து முழுமையாக)நம்பிக்கை வைப்பீராக.
218. அவன் எத்தகையவனென்றால், நீர் (தனித்து வணங்குவதற்காக) நிற்கும்சமயத்தில், அவன் உம்மைப்பார்க்கிறான்.
219. சிரம்பணிவோரில் (ருகூவு, ஸுஜூது செய்வதுகொண்டு நீர் இருக்கின்ற போது)உம்முடைய இயங்குதலையும் (அவன்பார்க்கிறான்.)
220. நிச்சயமாக அவன்—அவனே செவியேற்கிறவன், நன்கறிகிறவன்.
221. (விசுவாசிகளே!) ஷைத்தான்கள் எவர்மீது இறங்குகின்றனர் என்பதை உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா?
222 (செயலால்) பாவியான, (சொல்லால்) அதிகமாகப் பொய்கூறும் ஒவ்வொருவரின் மீதும் அவர்கள் இறங்குகின்றனர்.
223. தாங்கள் கேள்விப்பட்டதை, (அப்பொய்யர்களின் காதுகளில்) போடுகிறார்கள்; அவர்களில் பெரும்பாலோர் (பெரும்) பொய்யர்களே!
224. இன்னும் கவிஞர்கள் — அவர்களை வழிகெட்டவர்கள் தாம் பின்பற்றுகிறார்கள்.
225. நிச்சயமாக அவர்கள் ஒவ்வொரு பள்ளத்தாக்கிலும் (தட்டழிந்து) திரிகிறார்கள் என்பதை நீர் காணவில்லையா?
226. இன்னும் நிச்சயமாக அவர்கள் தாங்கள்செய்யாதவைகளை(ச் செய்ததாக)க் கூறுகிறார்கள்.
227. (ஆயினும் அவர்களில்) விசுவாசங்கொண்டு, நற்கருமங்களையும் செய்து, அல்லாஹ்வையும் அதிகமாக நினைவுகூர்ந்து, தாங்கள் அநியாயம் செய்யப்பட்ட பின் பழி தீர்த்துக் கொண்டார்களே அத்தகையோரைத்தவிர. மேலும், அநியாயம் செய்தோர், தாங்கள் எந்த மீளும் தலத்திற்கு திரும்பச் செல்ல வேண்டுமென்பதை (அதிசீக்கிரத்தில்)அறிந்துகொள்வார்கள்.

---

அத்தியாயம் : 27

## அந்நம்லு — எறும்புகள்

வசனங்கள் : 93 மக்கீ ருகூஃகள் : 7

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).**

1. தா ஸீன் — இவை குர்ஆனுடைய — இன்னும் தெளிவான வேதத்தினுடைய — வசனங்களாகும்.
2. விசுவாசங்கொண்டோருக்கு ஒரு நேர்வழியாகவும், நன்மாராயமாகவும் இருக்கிறது.
3. அவர்கள் எத்தகையோரென்றால், தொழுகையை நிறைவேற்றுவார்கள்; ஜகாத்தும் கொடுத்து வருவார்கள்; அன்றியும், மறுமையையும் அவர்கள் உறுதிகொள்வார்கள்.
4. நிச்சயமாக மறுமையைக்கொண்டு விசுவாசங்கொள்ளவில்லையே அத்தகையவர்கள் — (அவர்களுடைய் நிராகரிப்பின் காரணமாக) அவர்களுடைய செயல்களை நாம் அவர்களுக்கு அலங்கரித்துக்காண்பித்துவிட்டோம். ஆகவே, அவர்கள் (அதில்) தட்டழி(ந்து திரி)கின்றனர்.
5. அவர்கள் எத்தகையோரென்றால், (இம்மையில்) அவர்களுக்குத் தீய வேதனை உண்டு; இன்னும், அவர்கள் மறுமையில் — அவர்களே பெரும் நஷ்டமடைந்தவர்கள்.

وَاِنَّكَ لَتُلَقَّى الْقُرْاٰنَ مِنْ لَّدُنْ حَكِيْمٍ عَلِيْمٍ ﴿٦﴾ اِذْ قَالَ مُوْسٰى الثلثة
لِاَهْلِهٖٓ اِنِّيْٓ اٰنَسْتُ نَارًا ؕ سَاٰتِيْكُمْ مِّنْهَا بِخَبَرٍ اَوْ اٰتِيْكُمْ بِشِهَابٍ قَبَسٍ
لَّعَلَّكُمْ تَصْطَلُوْنَ ﴿٧﴾ فَلَمَّا جَآءَهَا نُوْدِيَ اَنْۢ بُوْرِكَ مَنْ فِي النَّارِ وَ
مَنْ حَوْلَهَا ؕ وَسُبْحٰنَ اللّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿٨﴾ يٰمُوْسٰٓى اِنَّهٗٓ اَنَا اللّٰهُ
الْعَزِيْزُ الْحَكِيْمُ ﴿٩﴾ وَاَلْقِ عَصَاكَ ؕ فَلَمَّا رَاٰهَا تَهْتَزُّ كَاَنَّهَا جَآنٌّ
وَّلّٰى مُدْبِرًا وَّلَمْ يُعَقِّبْ ؕ يٰمُوْسٰى لَا تَخَفْ ۫ اِنِّيْ لَا يَخَافُ لَدَيَّ
الْمُرْسَلُوْنَ ﴿١٠﴾ اِلَّا مَنْ ظَلَمَ ثُمَّ بَدَّلَ حُسْنًاۢ بَعْدَ سُوْٓءٍ فَاِنِّيْ
غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿١١﴾ وَاَدْخِلْ يَدَكَ فِيْ جَيْبِكَ تَخْرُجْ بَيْضَآءَ مِنْ
غَيْرِ سُوْٓءٍ ۫ فِيْ تِسْعِ اٰيٰتٍ اِلٰى فِرْعَوْنَ وَقَوْمِهٖ ؕ اِنَّهُمْ كَانُوْا
قَوْمًا فٰسِقِيْنَ ﴿١٢﴾ فَلَمَّا جَآءَتْهُمْ اٰيٰتُنَا مُبْصِرَةً قَالُوْا هٰذَا
سِحْرٌ مُّبِيْنٌ ﴿١٣﴾ وَجَحَدُوْا بِهَا وَاسْتَيْقَنَتْهَآ اَنْفُسُهُمْ ظُلْمًا وَّعُلُوًّا ؕ
فَانْظُرْ كَيْفَ كَانَ عَاقِبَةُ الْمُفْسِدِيْنَ ﴿١٤﴾ وَلَقَدْ اٰتَيْنَا دَاوٗدَ وَ ع
سُلَيْمٰنَ عِلْمًا ۚ وَقَالَا الْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ فَضَّلَنَا عَلٰى كَثِيْرٍ مِّنْ عِبَادِهِ
الْمُؤْمِنِيْنَ ﴿١٥﴾ وَوَرِثَ سُلَيْمٰنُ دَاوٗدَ وَقَالَ يٰٓاَيُّهَا النَّاسُ عُلِّمْنَا
مَنْطِقَ الطَّيْرِ وَاُوْتِيْنَا مِنْ كُلِّ شَيْءٍ ؕ اِنَّ هٰذَا لَهُوَ الْفَضْلُ الْمُبِيْنُ ﴿١٦﴾

6. (நபியே!) நிச்சயமாக தீர்க்கமான அறிவுடைய, (யாவையும்) நன்கறிந்தவனிட மிருந்து நீர் இந்தக் குர்ஆனைக் கொடுக்கப்படுகிறீர்.

7. மூஸா, தன் குடும்பத்தினரிடம், "நிச்சயமாக நான் ஒரு நெருப்பைக் காண்கிறேன்; (சென்றடையவேண்டிய வழிபற்றி) ஏதேனும் ஒரு செய்தியை அங்கிருந்து உங்களுக்குக் கொண்டு வருகிறேன். அல்லது நீங்கள் குளிர்காய்வதற்கு ஒரு நெருப்புப்பந்தத்தை (யாவது)கொண்டு வருகிறேன்" என்று கூறியதை (நபியே! நீர் நினைவு கூர்வீராக).

8. எனவே, அவர் அதனிடம் வந்த சமயத்தில், "நெருப்பில் இருப்பவர் மீதும், அதைச் சூழ இருப்பவர்(களான மலக்கு)கள் மீதும் பெரும் பாக்கியமளிக்கப் பட்டுள்ளது; மேலும் அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ் மிக்க பரிசுத்தமானவன்" என்று அழைக்கப்பட்டார்.

9. "மூஸாவே! நிச்சயமாக நான்தான் அல்லாஹ்; (யாவரையும்) மிகைத்தோன், தீர்க்கமான அறிவுடையோன்."

10. மேலும் "நீர் உம்முடைய தடியைப் போடும்" (என்று கூறப்பட்டதும், அவர் அதைப் போட்டார்.) அது ஒரு பாம்பைப்போல் மிகத்துரிதமாக நெளிந்து கொண்டிருக்க அதனைக் கண்டு, (பயந்து) அவர் திரும்பிப் பார்க்காது புறமுதுகிட்டுப் பின் சென்றார்; (அப்போது) "மூஸாவே! நீர் பயப்படாதீர்; நிச்சயமாக நான் (எத்தகையோனென்றால்) – தூதர்கள் என்னிடத்தில் பயப்படமாட்டார்கள்" (என்று அவருக்குக் கூறப்பட்டது)

11. "(ஆயினும்) எவர் அநியாயம் செய்து பின்னர் தீமைக்குப்பின் (அதனை) நன்மையாக மாற்றிக்கொள்கிறாரோ, அவரைத்தவிர – அப்பொழுது நிச்சயமாக நான் மிக்க மன்னிக்கிறவன், மிகக் கிருபையுடையவன்.

12. ("மூஸாவே !) இன்னும் நீர் உமது கையை, உம்முடைய சட்டைப்பைக்குள் நுழைப்பீராக! அது எவ்விதத் தீங்குமின்றி வெண்மையாக (ப் பிரகாசத்துடன்) வெளிவரும்; (இவை இரண்டும்) ஃபிர்அவ்னிடமும், அவனுடைய சமூகத்தாரி டமும் (நீர் எடுத்துச் சென்று காண்பிப்பதற்குரிய) ஒன்பது அத்தாட்சிகளில் உள்ளவையாகும்; நிச்சயமாக அவர்கள் பாவம் செய்யும் சமூகத்தவராக இருக்கின்றனர்" (என்றும் கூறப்பட்டது).

13. நம்முடைய அத்தாட்சிகள் (மிகத்தெளிவாக) பார்க்கக்கூடியவையாக அவர்களிடம் வந்தபொழுது, "இது தெளிவான சூனியம்தான்" என்று அவர்கள் கூறினார்கள்.

14. அவர்களுடைய இதயங்கள் அதனை (உண்மையென) உறுதிகொண்ட நிலையில் அநியாயமாகவும், அகம்பாவத்தாலும் அதனை அவர்கள் மறுத்தார்கள்; ஆகவே இந்த குழப்பவாதிகளின் முடிவு எப்படி இருந்தது என்பதை (நபியே!) நீர் (கவனித்துப்) பார்ப்பீராக!

15. தாவூதுக்கும், ஸுலைமானுக்கும் நிச்சயமாக நாம் கல்வியைக் கொடுத்தோம்; "விசுவாசங்கொண்ட தன்னுடைய (நல்ல) அடியார்களில் அநேகரைவிட எங்களை மேன்மையாக்கி வைத்தவனாகிய அல்லாஹ்வுக்கே புகழனைத்தும் உரியது" என்று அவ்விருவரும் கூறி (நன்றி செலுத்தி)னார்கள்.

16. மேலும் ஸுலைமான், தாவூதுக்கு வாரிசாக ஆனார்; இன்னும், "மனிதர்களே! பறவைகளின் மொழியை நாங்கள் கற்றுக்கொடுக்கப்பட்டுள்ளோம்; இன்னும், (எங்களுக்கு வேண்டிய) ஒவ்வொரு பொருளிலிருந்தும் (ஏராளமாக) நாங்கள் கொடுக்கப்பட்டுள்ளோம்; நிச்சயமாக இது – இதுதான் (அல்லாஹ்வின்) மிகத் தெளிவான பேரருளாகும்" என்று அவர் கூறி (நன்றியும் செலுத்தி)னார்.

وَحُشِرَ لِسُلَيْمٰنَ جُنُوْدُهٗ مِنَ الْجِنِّ وَالْاِنْسِ وَالطَّيْرِ فَهُمْ يُوْزَعُوْنَ ﴿١٧﴾
حَتّٰٓى اِذَآ اَتَوْا عَلٰى وَادِ النَّمْلِ ۙ قَالَتْ نَمْلَةٌ يّٰٓاَيُّهَا النَّمْلُ ادْخُلُوْا
مَسٰكِنَكُمْ ۚ لَا يَحْطِمَنَّكُمْ سُلَيْمٰنُ وَجُنُوْدُهٗ ۙ وَهُمْ لَا يَشْعُرُوْنَ ﴿١٨﴾
فَتَبَسَّمَ ضَاحِكًا مِّنْ قَوْلِهَا وَقَالَ رَبِّ اَوْزِعْنِيْٓ اَنْ اَشْكُرَ
نِعْمَتَكَ الَّتِيْٓ اَنْعَمْتَ عَلَيَّ وَعَلٰى وَالِدَيَّ وَاَنْ اَعْمَلَ صَالِحًا
تَرْضٰىهُ وَاَدْخِلْنِيْ بِرَحْمَتِكَ فِيْ عِبَادِكَ الصّٰلِحِيْنَ ﴿١٩﴾ وَتَفَقَّدَ
الطَّيْرَ فَقَالَ مَا لِيَ لَآ اَرَى الْهُدْهُدَ ۖ اَمْ كَانَ مِنَ الْغَآئِبِيْنَ ﴿٢٠﴾
لَاُعَذِّبَنَّهٗ عَذَابًا شَدِيْدًا اَوْ لَاَاذْبَحَنَّهٗٓ اَوْ لَيَاْتِيَنِّيْ بِسُلْطٰنٍ
مُّبِيْنٍ ﴿٢١﴾ فَمَكَثَ غَيْرَ بَعِيْدٍ فَقَالَ اَحَطْتُّ بِمَا لَمْ تُحِطْ بِهٖ وَ
جِئْتُكَ مِنْ سَبَاٍ بِنَبَاٍ يَّقِيْنٍ ﴿٢٢﴾ اِنِّيْ وَجَدْتُّ امْرَاَةً تَمْلِكُهُمْ
وَاُوْتِيَتْ مِنْ كُلِّ شَيْءٍ وَّلَهَا عَرْشٌ عَظِيْمٌ ﴿٢٣﴾ وَجَدْتُّهَا وَقَوْمَهَا
يَسْجُدُوْنَ لِلشَّمْسِ مِنْ دُوْنِ اللّٰهِ وَزَيَّنَ لَهُمُ الشَّيْطٰنُ اَعْمَالَهُمْ
فَصَدَّهُمْ عَنِ السَّبِيْلِ فَهُمْ لَا يَهْتَدُوْنَ ﴿٢٤﴾ اَلَّا يَسْجُدُوْا لِلّٰهِ
الَّذِيْ يُخْرِجُ الْخَبْءَ فِي السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَيَعْلَمُ مَا تُخْفُوْنَ
وَمَا تُعْلِنُوْنَ ﴿٢٥﴾ اَللّٰهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَ رَبُّ الْعَرْشِ الْعَظِيْمِ ۩ السجدة ﴿٢٦﴾ السجدة ٨

17. மேலும் ஸுலைமானுக்கு, ஜின்கள், மனிதர்கள், பறவைகள் முதலியவற்றிலிருந்து அவரது படைகள் அவர் முன் திரட்டப்பட்டது; பிறகு (அவர்களில் முன்னுள்ளவர்களுடன் அவர்களில் பின்னுள்ளவர்கள் சேர்ந்து கொள்வதற்காக)_ அவர்கள் நிறுத்தி வைக்கப்பட்டனர்.

18. இறுதியாக அவர்கள் எறும்புகள் வசிக்கும் ஓர் ஓடையின் சமீபமாக வந்தபொழுது (அவற்றில்) ஓர் எறும்பு: (மற்ற எறும்புகளிடம்,) "எறும்புகளே! நீங்கள் உங்கள் புற்றுகளுக்குள் நுழைந்து கொள்ளுங்கள் ; ஸுலைமானும், அவருடைய படையினரும்(உங்களைப்பற்றி)உணராது, உங்களைத் திண்ணமாக மிதித்துவிட வேண்டாம்" என்று கூறியது.

19. அப்போது அதனுடைய சொல்லால் சிரித்தவராக அவர் புன்னகை புரிந்தார். "என் இரட்சகனே! நீ என்மீதும், என் தாய் தந்தையர் மீதும் புரிந்த உன்னுடைய அருள்களுக்கு (உனக்கு) நான் நன்றி செலுத்துவதற்கும், எதனை நீ பொருந்திக்கொள்வாயோ அத்தகைய நற்செயலையும் நான் செய்ய(க்கூடிய நற்பேறை எனக்கு) அருள் புரிவாயாக! இன்னும், உன்னுடைய கிருபையைக் கொண்டு உன்னுடைய நல்லடியார்களி(ன் கூட்டத்தி)ல் என்னைப் பிரவேசிக்கச் செய்வாயாக!" என்று (பிரார்த்தனை செய்து) அவர் கூறினார்.

20. இன்னும் அவர், பறவைகளை(க்கணக்கெடுக்க)ப் பார்வையிட்டார். "எனக்கு என்ன ஆயிற்று ?(பறவைகளில்) "ஹுத் ஹுதை" நான் காணவில்லையே! அல்லது அது (வராமல்) மறைந்தவற்றில் ஆகிவிட்டதா?" என்று கூறினார்.

21. "நிச்சயமாக நான் அதனைக் கடினமான வேதனையாக வேதனை செய்வேன்; அல்லது அதனை நிச்சயமாக நான் அறுத்துவிடுவேன்; அல்லது (அது வராததற்குத்) தெளிவான ஆதாரத்தைத் திட்டமாக அது (என் முன்) கொண்டுவரவேண்டும்" என்று கூறினார்.

22. (இவ்வாறு கூறி) சிறிது நேரம் தாமதித்தார். (அதற்குள் ஹுத் ஹுத் வந்து) "நீங்கள் அறியாத ஒரு விஷயத்தை நான் அறிந்துகொண்டேன். 'ஸப உ'விலிருந்து உம்மிடம் உறுதியான செய்தியைக் கொண்டுவந்திருக்கிறேன்" என்று அது கூறியது.

23. "அவர்களை (அங்கு) ஆட்சிசெய்கின்ற ஒரு பெண்ணை நிச்சயமாக நான் கண்டேன்; ஒவ்வொரு பொருளிலிருந்தும் அவள் கொடுக்கப்பட்டுள்ளாள்; மகத்தான சிம்மாசனமும் அவளுக்கு இருக்கின்றது."

24. "அவளையும், அவளுடைய சமூகத்தாரையும் அல்லாஹ்வையன்றி சூரியனுக்குச் சிரம்பணி(ந்து வணங்கு)பவர்களாக நான் கண்டேன்; அவர்களுடைய இக்காரியங்களை ஷைத்தான் அவர்களுக்கு அலங்காரமாகக் காண்பித்தும்விட்டான்; எனவே, அவர்களை நேரான பாதையிலிருந்து அவன் தடுத்துவிட்டான்; ஆகவே, அவர்கள் நேர்வழி பெறவில்லை_

25. "வானங்களிலும், பூமியிலும் மறைந்திருப்பவற்றை வெளிக்கொணர்பவனும், நீங்கள் மறைத்துக்கொள்வதையும், நீங்கள் வெளியாக்குவதையும் நன்கறிபவனுமாகிய அல்லாஹ்வுக்கு அவர்கள் சிரம்பணியாமல் இருப்பதற்கு (ஷைத்தான் தடுத்துவிட்டதே) காரணமாகும்.

26. அல்லாஹ்_அவனைத் தவிர (வணக்கத்திற்குரிய வேறு) நாயன் இல்லை; அவன் தான் மகத்தான அர்ஷுக்குரியவன்" (என்று ஹுத் ஹுது கூறிற்று.)

قَالَ سَنَنْظُرُ اَصَدَقْتَ اَمْ كُنْتَ مِنَ الْكٰذِبِيْنَ ﴿٢٧﴾ اِذْهَبْ بِّكِتٰبِيْ
هٰذَا فَاَلْقِهْ اِلَيْهِمْ ثُمَّ تَوَلَّ عَنْهُمْ فَانْظُرْ مَاذَا يَرْجِعُوْنَ ﴿٢٨﴾ قَالَتْ
يٰۤاَيُّهَا الْمَلَؤُا اِنِّيْۤ اُلْقِيَ اِلَيَّ كِتٰبٌ كَرِيْمٌ ﴿٢٩﴾ اِنَّهٗ مِنْ سُلَيْمٰنَ وَاِنَّهٗ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿٣٠﴾ اَلَّا تَعْلُوْا عَلَيَّ وَاْتُوْنِيْ مُسْلِمِيْنَ ﴿٣١﴾ ع ٢ ١٧ ١٧
قَالَتْ يٰۤاَيُّهَا الْمَلَؤُا اَفْتُوْنِيْ فِيْۤ اَمْرِيْ ۚ مَا كُنْتُ قَاطِعَةً اَمْرًا
حَتّٰى تَشْهَدُوْنِ ﴿٣٢﴾ قَالُوْا نَحْنُ اُولُوْا قُوَّةٍ وَّاُولُوْا بَاْسٍ شَدِيْدٍ ۙ۬
وَّالْاَمْرُ اِلَيْكِ فَانْظُرِيْ مَاذَا تَاْمُرِيْنَ ﴿٣٣﴾ قَالَتْ اِنَّ الْمُلُوْكَ
اِذَا دَخَلُوْا قَرْيَةً اَفْسَدُوْهَا وَجَعَلُوْۤا اَعِزَّةَ اَهْلِهَاۤ اَذِلَّةً ۚ وَ
كَذٰلِكَ يَفْعَلُوْنَ ﴿٣٤﴾ وَاِنِّيْ مُرْسِلَةٌ اِلَيْهِمْ بِهَدِيَّةٍ فَنٰظِرَةٌۢ بِمَ
يَرْجِعُ الْمُرْسَلُوْنَ ﴿٣٥﴾ فَلَمَّا جَآءَ سُلَيْمٰنَ قَالَ اَتُمِدُّوْنَنِ بِمَالٍ ۫ فَمَاۤ
اٰتٰىنِۦَ اللّٰهُ خَيْرٌ مِّمَّاۤ اٰتٰىكُمْ ۚ بَلْ اَنْتُمْ بِهَدِيَّتِكُمْ تَفْرَحُوْنَ ﴿٣٦﴾ اِرْجِعْ
اِلَيْهِمْ فَلَنَاْتِيَنَّهُمْ بِجُنُوْدٍ لَّا قِبَلَ لَهُمْ بِهَا وَلَنُخْرِجَنَّهُمْ مِّنْهَاۤ
اَذِلَّةً وَّهُمْ صٰغِرُوْنَ ﴿٣٧﴾ قَالَ يٰۤاَيُّهَا الْمَلَؤُا اَيُّكُمْ يَاْتِيْنِيْ بِعَرْشِهَا
قَبْلَ اَنْ يَّاْتُوْنِيْ مُسْلِمِيْنَ ﴿٣٨﴾ قَالَ عِفْرِيْتٌ مِّنَ الْجِنِّ اَنَا اٰتِيْكَ
بِهٖ قَبْلَ اَنْ تَقُوْمَ مِنْ مَّقَامِكَ ۚ وَاِنِّيْ عَلَيْهِ لَقَوِيٌّ اَمِيْنٌ ﴿٣٩﴾

27. "நீ உண்மை சொல்கிறாயா, அல்லது பொய்யர்களில் நீ இருக்கிறாயா? என்பதை நாம் காண்போம்" என்றும் (ஸுலைமானாகிய) அவர் கூறினார்.

28. "என்னுடைய இக்கடிதத்தைக் கொண்டுசென்று, அவர்கள்பால் போட்டுவிட்டுப் பின்னர் அவர்களை விட்டுப்பின் வாங்கி (இருந்து), அவர்கள் என்ன முடிவுக்கு வருகிறார்கள் என்பதை நீ கவனி(த்து வா" என்று கூறினார்).

29. (அவ்வாறே அப்பறவை செய்தது, அக்கடிதத்தைப் பெற்ற அவ்வரசி) "பிரதானிகளே! மிக்க கண்ணியமுள்ள ஒரு கடிதம் என் முன் போடப்பட்டிருக்கின்றது" என்று அவள் கூறினாள்.

30. நிச்சயமாக "இது ஸுலைமானிடமிருந்து வந்துள்ளது; இன்னும், நிச்சயமாக அ(தன் ஆரம்பமான)து பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம் என்று "(எழுதப்பட்டு) இருக்கிறது.

31. "நீங்கள் என் மீது(எனக்கெதிராக) பெருமை பாராட்டாதீர்கள். (அல்லாஹ்வுக்கு) முற்றிலும் கீழ்ப்படிந்தவர்களாக என்னிடம் வாருங்கள்" என்று (ம்,எழுதப்பட்டு) இருக்கின்றது,(என அவள் கூறினாள்.)

32. "பிரதானிகளே ! என்னுடைய (இவ்) விஷயத்தில் நீங்கள் (உங்கள்) ஆலோசனையைக் கூறுவீர்களாக! எனக்கு நீங்கள் முன்னிலையாகி (அபிப்பிராயம்) கூறாதவரையில்,நான் எவ்விஷயத்தையும் முடிவு செய்பவளல்ல" என்று அவள் கூறினாள்.

33. அ(தற்க)வர்கள், "நாங்கள் பலசாலிகளாகவும், கடுமையாக போர் செய்யக் கூடியவர்களாகவும் இருக்கின்றோம்; இன்னும், கட்டளையிடுவது உங்களிடமுள்ளது; ஆகவே, நீங்கள் எதைக்கட்டளையிடுகிறீர்கள் என்பதை நன்கு கவனித்துப் பாருங்கள்" என்று கூறினார்கள்.

34. அ(தற்க)வள்: "நிச்சயமாக அரசர்கள் எந்த ஒரு ஊரிலும் (படையெடுத்து) நுழைவார்களானால், அதனைப்பாழ்படுத்திவிடுகின்றனர்; அன்றியும், அங்குள்ள கண்ணியவான்களை (இழிவுபடுத்தி) சிறுமையாளர்களாக ஆக்கி விடுகின்றனர். இவர்களும் அவ்வாறே செய்வார்கள்" என்று கூறினாள்.

35. மேலும், "நிச்சயமாக நான் அவர்களிடம் ஓர் அன்பளிப்பை அனுப்பி வைக்கக்கூடியவளாக இருக்கிறேன்; பின்னர் தூதர்கள் என்ன பதில் கொண்டுவருகிறார்கள் என்பதை நான் பார்க்கப்போகிறேன்" (என்றும் கூறினாள்).

36. அவர்கள் ஸுலைமானிடம் வரவே, "நீங்கள் பொருளைக் கொண்டு எனக்கு உதவி செய்கின்றீர்களா? அல்லாஹ் எனக்குக் கொடுத்திருப்பவைகள் உங்களுக்குக் கொடுத்திருப்பவைகளைவிட மிகச் சிறந்ததாகும்; மாறாக, உங்களுடைய அன்பளிப்பைக் கொண்டு நீங்களே சந்தோஷமடைவீர்கள்" என்று கூறினார்.

37. "நீர் அவர்களிடம் திரும்பிச் செல்வீராக! நிச்சயமாக நாங்கள் படைகளுடன் அவர்களிடம் வருவோம்; அவர்களுக்கு அதை எதிர்க்க பலம் இல்லை; இன்னும், அவர்கள் சிறுமையடைந்தவர்களாக இருக்கும் நிலையில், கேவலமானவர்களாக அ(வர்களின் நகரத்)திலிருந்து அவர்களை நிச்சயமாக வெளியேற்றி விடுவோம் (என்றும் கூறினார்).

38. "பிரதானிகளே! அவர்கள் முஸ்லிம்களாக என்னிடம் வந்து சேர்வதற்கு முன்னதாகவே, உங்களில் யார் அவளுடைய சிம்மாசனத்தை என்னிடம் கொண்டு வருபவர்?" என்று (ஸுலைமானாகிய) அவர் கேட்டார்.

39. அதற்கு ஜின்களிலுள்ள இஃப்ரீத் (என்ற மிகப்பலம்பெற்ற ஜின்), "நீங்கள் உங்கள் இடத்திலிருந்து எழுந்திருப்பதற்கு முன், அதனை நான் உங்களிடம் கொண்டுவந்துவிடுவேன்; நிச்சயமாக நான் இதற்கு மிக்க சக்தியுடையவன்; மிக்க நம்பிக்கையும் உடையவன்" என்று கூறியது.

قَالَ الَّذِیۡ عِنۡدَہٗ عِلۡمٌ مِّنَ الۡکِتٰبِ اَنَا اٰتِیۡکَ بِہٖ قَبۡلَ
اَنۡ یَّرۡتَدَّ اِلَیۡکَ طَرۡفُکَ ؕ فَلَمَّا رَاٰہُ مُسۡتَقِرًّا عِنۡدَہٗ قَالَ
ہٰذَا مِنۡ فَضۡلِ رَبِّیۡ ۟ۖ لِیَبۡلُوَنِیۡۤ ءَاَشۡکُرُ اَمۡ اَکۡفُرُ ؕ وَ مَنۡ
شَکَرَ فَاِنَّمَا یَشۡکُرُ لِنَفۡسِہٖ ۚ وَ مَنۡ کَفَرَ فَاِنَّ رَبِّیۡ غَنِیٌّ
کَرِیۡمٌ ﴿۴۰﴾ قَالَ نَکِّرُوۡا لَہَا عَرۡشَہَا نَنۡظُرۡ اَتَہۡتَدِیۡۤ اَمۡ تَکُوۡنُ
مِنَ الَّذِیۡنَ لَا یَہۡتَدُوۡنَ ﴿۴۱﴾ فَلَمَّا جَآءَتۡ قِیۡلَ اَہٰکَذَا
عَرۡشُکِ ؕ قَالَتۡ کَاَنَّہٗ ہُوَ ۚ وَ اُوۡتِیۡنَا الۡعِلۡمَ مِنۡ قَبۡلِہَا وَ
کُنَّا مُسۡلِمِیۡنَ ﴿۴۲﴾ وَ صَدَّہَا مَا کَانَتۡ تَّعۡبُدُ مِنۡ دُوۡنِ اللّٰہِ ؕ
اِنَّہَا کَانَتۡ مِنۡ قَوۡمٍ کٰفِرِیۡنَ ﴿۴۳﴾ قِیۡلَ لَہَا ادۡخُلِی الصَّرۡحَ ۚ
فَلَمَّا رَاَتۡہُ حَسِبَتۡہُ لُجَّۃً وَّ کَشَفَتۡ عَنۡ سَاقَیۡہَا ؕ قَالَ اِنَّہٗ
صَرۡحٌ مُّمَرَّدٌ مِّنۡ قَوَارِیۡرَ ۬ؕ قَالَتۡ رَبِّ اِنِّیۡ ظَلَمۡتُ نَفۡسِیۡ وَ
اَسۡلَمۡتُ مَعَ سُلَیۡمٰنَ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿٪۴۴﴾ وَ لَقَدۡ اَرۡسَلۡنَاۤ اِلٰی ٣ ع ١٣ ١٨
ثَمُوۡدَ اَخَاہُمۡ صٰلِحًا اَنِ اعۡبُدُوا اللّٰہَ فَاِذَا ہُمۡ فَرِیۡقٰنِ
یَخۡتَصِمُوۡنَ ﴿۴۵﴾ قَالَ یٰقَوۡمِ لِمَ تَسۡتَعۡجِلُوۡنَ بِالسَّیِّئَۃِ قَبۡلَ
الۡحَسَنَۃِ ۚ لَوۡ لَا تَسۡتَغۡفِرُوۡنَ اللّٰہَ لَعَلَّکُمۡ تُرۡحَمُوۡنَ ﴿۴۶﴾

40. (எனினும்) வேதத்திலிருந்து அறிவைத் தன்னிடம் கொண்டிருந்தவரான ஒருவர் " உம்முடைய பார்வை உம் பக்கம் திரும்புமுன்(கண் இமைப்பதற்குள்) அதனை நான் உம்மிடம் கொண்டுவந்துவிடுவேன்" என்று கூறினார்; (அவ்வாறே கொண்டுவரப்பட்டு,) அது தம் முன் நிலைபெற்றிருப்பதை (ஸுலைமானாகிய) அவர் கண்டபோது, "இது என் இரட்சகனின் பேரருளில்உள்ளதாகும்; நான் அவனுக்கு நன்றி செலுத்துகின்றேனா? அல்லது நன்றி கெட்டவனாக இருக்கிறேனா? என்று என்னைச் சோதிப்பதற்காக (இவ்வாறு வழங்கியுள்ளான்); மேலும், எவர் (அல்லாஹ்வுக்கு) நன்றி செலுத்துகிறாரோ அவர் நன்றிசெலுத்துவதெல்லாம் (அதன் பலன்) அவருக்கே; இன்னும், எவர் (நன்றிசெய்யாது) நிராகரிக்கிறாரோ (அது அவருக்கே கேடாகும், காரணம்:) நிச்சயமாக என் இரட்சகன் (எவரிடமிருந்தும்) தேவையற்றவன்; கண்ணியமுள்ளவன்" என்று கூறினார்.

41. "அவளுடைய சிம்மாசனத்தை (அதன் அமைப்பை) மாற்றி விடுங்கள்; அவள் (அதனை பற்றி)அறிந்துகொள்கிறாளா? அல்லது அறிந்துகொள்ள முடியாதவர்களில் (ஒருத்தியாக) இருக்கிறாளா? என்று பார்ப்போம்" என்று (ஸுலைமானாகிய) அவர் கூறினார்.

42. அவள் வந்த பொழுது (அவளிடம்,) " உன்னுடைய சிம்மாசனம் இவ்வாறு தானா?" என்று கேட்கப்பட்டது. அ(தற்க)வள் "நிச்சயமாக இது அதைப்போலவே இருக்கின்றது என்று கூறினாள். இதற்கு முன்னதாகவே (உங்களைப்பற்றிய) அறிவை நாம் கொடுக்கப்பட்டிருந்தோம்; நாங்கள் முற்றிலும் (அல்லாஹ்வுக்கு) கீழ்ப்படிந்தவர்களாகவும் இருக்கிறோம்" (என்று ஸுலைமான் கூறினார்).

43. அல்லாஹ்வையன்றி அவள் (மற்றவைகளை) வணங்கிக் கொண்டிருந்தது அவளை (விசுவாசங்கொள்வதிலிருந்து) தடுத்துவிட்டது. (ஏனென்றால்), நிச்சயமாக அவள் (அல்லாஹ்வை) நிராகரிப்பவர்களின் சமூகத்தாரில் உள்ளவளாக இருந்தாள்.

44. (பின்னர்) அவளிடம், "இம்மாளிகையில் பிரவேசிப்பாயாக !"எனக் கூறப்பட்டது. அவள் அதைப்பார்த்த போது தண்ணீர் தடாகம் என்றெண்ணிவிட்டாள்; (நனைந்து போகாதிருக்க தன் ஆடையை) தனது இரு கெண்டைக்கால்களுக்குமேல் உயர்த்தினாள்; (இதைக்கண்ட ஸுலைமான், "அது தண்ணீரல்ல) நிச்சயமாக இது பளிங்குகளால் பளபளப்பாக்கப்பட்ட மாளிகை" என்று கூறினார். அ(தற்க)வள், "என் இரட்சகனே! நிச்சயமாக நான் எனக்கே அநியாயம் செய்துவிட்டேன்; அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கு, ஸுலைமானுடன் நானும் முற்றிலும் கீழ்ப்படிந்து (இஸ்லாமாகி) விட்டேன்" என்று கூறினாள்.

45. மேலும், நிச்சயமாக நாம், ஸமூது (கூட்டத்தார்)பால் அவர்களுடைய சகோதரர் ஸாலிஹை அனுப்பிவைத்தோம்; அவர், (அவர்களிடம்,) "நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள் " (என்று கூறினார்) ; அது சமயம் அவர்கள் இரு பிரிவினராகப்பிரிந்து,(தங்களுக்குள்) தர்க்கம் செய்துகொள்ளலாயினர்.

46. "என்னுடைய சமூகத்தாரே! நன்மைக்கு முன்னதாகத் தீமையைக் கொண்டு நீங்கள் ஏன் அவசரப்படுகிறீர்கள்? நீங்கள் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோரவேண்டாமா? (அதன் மூலம்) நீங்கள் கிருபை செய்யப்படுவீர்கள்" என்று (ஸாலிஹாகிய) அவர் கூறினார்.

قَالُوا اطَّيَّرْنَا بِكَ وَبِمَنْ مَّعَكَ ؕ قَالَ طٰٓئِرُكُمْ عِنْدَ اللّٰهِ بَلْ
اَنْتُمْ قَوْمٌ تُفْتَنُوْنَ ﴿٤٧﴾ وَكَانَ فِی الْمَدِيْنَةِ تِسْعَةُ رَهْطٍ يُّفْسِدُوْنَ
فِی الْاَرْضِ وَلَا يُصْلِحُوْنَ ﴿٤٨﴾ قَالُوْا تَقَاسَمُوْا بِاللّٰهِ لَنُبَيِّتَنَّهٗ وَ
اَهْلَهٗ ثُمَّ لَنَقُوْلَنَّ لِوَلِيِّهٖ مَا شَهِدْنَا مَهْلِكَ اَهْلِهٖ وَاِنَّا لَصٰدِقُوْنَ ﴿٤٩﴾
وَمَكَرُوْا مَكْرًا وَّمَكَرْنَا مَكْرًا وَّهُمْ لَا يَشْعُرُوْنَ ﴿٥٠﴾ فَانْظُرْ كَيْفَ
كَانَ عَاقِبَةُ مَكْرِهِمْ ۙ اَنَّا دَمَّرْنٰهُمْ وَقَوْمَهُمْ اَجْمَعِيْنَ ﴿٥١﴾ فَتِلْكَ
بُيُوْتُهُمْ خَاوِيَةًۢ بِمَا ظَلَمُوْا ؕ اِنَّ فِیْ ذٰلِكَ لَاٰيَةً لِّقَوْمٍ يَّعْلَمُوْنَ ﴿٥٢﴾
وَاَنْجَيْنَا الَّذِيْنَ اٰمَنُوْا وَكَانُوْا يَتَّقُوْنَ ﴿٥٣﴾ وَلُوْطًا اِذْ قَالَ
لِقَوْمِهٖۤ اَتَاْتُوْنَ الْفَاحِشَةَ وَاَنْتُمْ تُبْصِرُوْنَ ﴿٥٤﴾ اَئِنَّكُمْ
لَتَاْتُوْنَ الرِّجَالَ شَهْوَةً مِّنْ دُوْنِ النِّسَآءِ ؕ بَلْ اَنْتُمْ قَوْمٌ
تَجْهَلُوْنَ ﴿٥٥﴾ فَمَا كَانَ جَوَابَ قَوْمِهٖۤ اِلَّاۤ اَنْ قَالُوْۤا اَخْرِجُوْۤا اٰلَ
لُوْطٍ مِّنْ قَرْيَتِكُمْ ۚ اِنَّهُمْ اُنَاسٌ يَّتَطَهَّرُوْنَ ﴿٥٦﴾ فَاَنْجَيْنٰهُ وَ
اَهْلَهٗۤ اِلَّا امْرَاَتَهٗ ۫ قَدَّرْنٰهَا مِنَ الْغٰبِرِيْنَ ﴿٥٧﴾ وَاَمْطَرْنَا
عَلَيْهِمْ مَّطَرًا ۚ فَسَآءَ مَطَرُ الْمُنْذَرِيْنَ ﴿٥٨﴾ قُلِ الْحَمْدُ لِلّٰهِ وَسَلٰمٌ ع ٤ ١٤ ١٩
عَلٰی عِبَادِهِ الَّذِيْنَ اصْطَفٰی ؕ آٰللّٰهُ خَيْرٌ اَمَّا يُشْرِكُوْنَ ﴿٥٩﴾

47. அ(தற்க)வர்கள், "உம்மையும், உம்முடன் இருப்பவர்களையும் நாங்கள் துர்ச்சகுனமாகக்கருதுகிறோம்" என்று கூறினார்கள்; அ(தற்க)வர், "உங்கள் துர்ச்சகுனம் (அதன் காரணம்) அல்லாஹ்விடம் இருக்கிறது. மாறாக, நீங்கள் (அல்லாஹ்வினால்)சோதனைக்குள்ளாக்கப்படும்சமூகத்தாராக இருக்கின்றீர்கள்" என்று கூறினார்.

48. (ஸாலிஹ் நபி வாழ்ந்து வந்த) அந்நகரில், ஒன்பது மனிதர்கள் இருந்தார்கள்; அவர்கள் பூமியில் குழப்பம் செய்பவர்களாக, மற்றும் சீர்திருத்தம் செய்யாதவர்களாக இருந்தனர்.

49. (குழப்பக்காரர்களான அவர்கள்) நிச்சயமாக (ஸாலிஹ் நபியாகிய) அவரையும், அவருடைய குடும்பத்தினரையும் நாம் இரவோடு இரவாக அழித்துவிடுவோம் என்று நீங்கள் அல்லாஹ்வைக்கொண்டு சத்தியம் செய்து கொள்ளுங்கள்;பின்னர், அவர் குடும்பத்தினர் அழிக்கப்பட்ட இடத்திற்கு நாங்கள் வரவேயில்லை; நிச்சயமாக நாங்கள் உண்மையே சொல்கிறோம் என்று அவருடைய பாதுகாப்பாளரிடம் திட்டமாகக் கூறிக்கொள்வோம்" என்று (அவர்களுக்குள்) கூறினார்கள் .

50. இன்னும், (இதுபோன்றே) அவர்கள் ஒரு சூழ்ச்சி செய்தார்கள்; நாமும் (நம் தண்டனையைக் கொண்டு அவர்களின் சூழ்ச்சியை முறியடிக்க) சூழ்ச்சிசெய்தோம்; அவர்களோ (அதனை) உணர்ந்துகொள்ளவில்லை.

51. ஆகவே, அவர்களுடைய சூழ்ச்சியின் முடிவு எப்படி இருந்தது என்பதை (நபியே!) நீர் கவனிப்பீராக; நிச்சயமாக அவர்களையும், அவர்களுடைய சமூகத்தார் அனைவரையும் அடியோடு நாம் அழித்து விட்டோம்.

52. ஆகவே, அவர்கள் செய்துகொண்டிருந்த அநியாயங்களின் காரணமாக அவர்களுடைய அந்தவீடுகள், குடியிருப்பற்றுக் கிடக்கின்றன; அறியக்கூடிய சமூகத்தார்க்கு நிச்சயமாக இதில் ஒரு படிப்பினை இருக்கின்றது.

53. விசுவாசங்கொண்டு, (அல்லாஹ்வுக்குப்) பயந்தும் கொண்டிருந்தார்களே அத்தகையவர்களை நாமேகாப்பாற்றினோம்.

54. லூத்தையும்_ (நாம் நம்முடைய தூதராக அனுப்பிவைத்ததை நினைவு கூர்வீராக) அவர் தன் ஜனங்களிடம், "நீங்கள் (உங்களில் சிலர் சிலரைப்) பார்த்தவர்களாக இருக்க மானக்கேடான செயலைச்செய்கின்றீர்களா?" என்று அவர் கூறியபோது_

55. "நிச்சயமாக நீங்கள் பெண்களைத்தவிர்த்து(விட்டு) ஆண்களிடம் மோகங்கொண்டு வருகின்றீர்களா? மாறாக நீங்கள் முற்றிலும் அறிவில்லாதக் கூட்டத்தினராக இருக்கிறீர்கள்" (என்று கூறினார்).

56. " லூத்துடைய குடும்பத்தை உங்கள் ஊரைவிட்டு நீங்கள் வெளியேற்றி விடுங்கள்; நிச்சயமாக அவர்கள் மிகப் பரிசுத்தமான மனிதர்கள் என்று (பரிகாசமாக)அவர்கள் கூறியதைத் தவிர, (வேறெதுவும்)அவருடைய சமூகத்தாரின் பதிலாக இருந்ததில்லை.

57. ஆகவே, அவருடைய மனைவியைத் தவிர அவரையும், அவருடைய குடும்பத்தினரையும் நாம் காப்பாற்றிக்கொண்டோம்; அவளை (வேதனை செய்யப்படுபவர்களோடு) தங்கிவிடுபவர்களில் உள்ளவளாக நாம் நிர்ணயித்து விட்டோம்.

58. ஆகவே, அவர்கள் மீது (கல்) மாரியை நாம் பொழியச்செய்தோம்; எச்சரிக்கப்பட்டவர்களின் (கல்)மாரி மிகக்கெட்டது.

59. (ஆகவே, நபியே!) "புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! இன்னும், அவன் தேர்ந்தெடுத்தோரான அவனுடைய அடியார்கள் மீது சாந்தி உண்டாவதாக," என்று கூறுவீராக! அல்லாஹ் மேலானவனா, அல்லது அவர்கள் (அவனுக்கு) இணையாக்குகின்றவைகளா?

اَمَّنۡ خَلَقَ السَّمٰوٰتِ وَالۡاَرۡضَ وَاَنۡزَلَ لَكُمۡ مِّنَ
السَّمَآءِ مَآءً‌ ۚ فَاَنۡۢبَتۡنَا بِهٖ حَدَآٮِٕقَ ذَاتَ بَهۡجَةٍ‌ ۚ مَا كَانَ
لَكُمۡ اَنۡ تُنۡۢبِتُوۡا شَجَرَهَا ؕ ءَاِلٰـهٌ مَّعَ اللّٰهِ ؕ بَلۡ هُمۡ قَوۡمٌ يَّعۡدِلُوۡنَ ؕ ﴿٦٠﴾
اَمَّنۡ جَعَلَ الۡاَرۡضَ قَرَارًا وَّجَعَلَ خِلٰلَهَاۤ اَنۡهٰرًا وَّجَعَلَ
لَهَا رَوَاسِىَ وَجَعَلَ بَيۡنَ الۡبَحۡرَيۡنِ حَاجِزًا ؕ ءَاِلٰـهٌ مَّعَ اللّٰهِ ؕ
بَلۡ اَكۡثَرُهُمۡ لَا يَعۡلَمُوۡنَ ؕ ﴿٦١﴾ اَمَّنۡ يُّجِيۡبُ الۡمُضۡطَرَّ اِذَا دَعَاهُ
وَيَكۡشِفُ السُّوۡٓءَ وَيَجۡعَلُكُمۡ خُلَفَآءَ الۡاَرۡضِ ؕ ءَاِلٰـهٌ مَّعَ اللّٰهِ ؕ
قَلِيۡلًا مَّا تَذَكَّرُوۡنَ ؕ ﴿٦٢﴾ اَمَّنۡ يَّهۡدِيۡكُمۡ فِىۡ ظُلُمٰتِ الۡبَرِّ وَ
الۡبَحۡرِ وَمَنۡ يُّرۡسِلُ الرِّيٰحَ بُشۡرًاۢ بَيۡنَ يَدَىۡ رَحۡمَتِهٖ ؕ
ءَاِلٰـهٌ مَّعَ اللّٰهِ ؕ تَعٰلَى اللّٰهُ عَمَّا يُشۡرِكُوۡنَ ؕ ﴿٦٣﴾ اَمَّنۡ يَّبۡدَؤُا
الۡخَلۡقَ ثُمَّ يُعِيۡدُهٗ وَمَنۡ يَّرۡزُقُكُمۡ مِّنَ السَّمَآءِ وَالۡاَرۡضِ ؕ
ءَاِلٰـهٌ مَّعَ اللّٰهِ ؕ قُلۡ هَاتُوۡا بُرۡهَانَكُمۡ اِنۡ كُنۡتُمۡ صٰدِقِيۡنَ ﴿٦٤﴾
قُلۡ لَّا يَعۡلَمُ مَنۡ فِى السَّمٰوٰتِ وَالۡاَرۡضِ الۡغَيۡبَ اِلَّا اللّٰهُ ؕ
وَمَا يَشۡعُرُوۡنَ اَيَّانَ يُبۡعَثُوۡنَ ﴿٦٥﴾ بَلِ ادّٰرَكَ عِلۡمُهُمۡ فِى
الۡاٰخِرَةِ قف بَلۡ هُمۡ فِىۡ شَكٍّ مِّنۡهَا ۚ بَلۡ هُمۡ مِّنۡهَا عَمُوۡنَ ﴿٦٦﴾ ع ٥ ٤٨

60. (உங்களுடைய தெய்வங்கள் சிறந்தவையா?)அல்லது வானங்களையும், பூமியையும் படைத்து, வானத்திலிருந்து உங்களுக்காக தண்ணீரை (மழையை)யும் இறக்கி வைத்தவ(ன் சிறந்தவ)னா? (பின்னர்) நாமே அதனைக் கொண்டு செழிப்பான தோட்டங்களை முளைக்கச்செய்கிறோம்; (நாம் மழையை இறக்காவிட்டால்) அதன் மரங்களை முளைக்கச்செய்யவே உங்களால் முடியாது; ஆகவே, அல்லாஹ்வுடன் வேறு வணக்கத்திற்குரியவன் இருக்கின்றானா?இல்லை; இவர்கள் (தங்கள் தெய்வங்களாக கற்பனை செய்தவற்றை அல்லாஹ்வுக்கு) சமமாக்குகின்ற கூட்டத்தினராக இருக்கின்றனர்.

61. (உங்களுடைய தெய்வங்கள் சிறந்தவையா?) அல்லது பூமியை உறுதியானதாக்கி அதனிடையே ஆறுகளையும் உண்டாக்கி, அதற்காக(அதன் மீது) கனமான மலைகளையும் அமைத்து, இரு கடல்களுக்கிடையில் தடுப்பையும் ஏற்படுத்தியவ(ன் சிறந்தவ)னா?( இவைகளைச் செய்த ) அல்லாஹ்வுடன் வேறு வணக்கத்திற்குரியவன் இருக்கின்றானா ? இல்லை! அவர்களில் பெரும்பாலோர் இதுபற்றி அறியமாட்டார்கள்.

62. (உங்களுடைய தெய்வங்கள் சிறந்தவையா ? ) அல்லது கடுந்துன்பத்திற்குள்ளாக்கப் பட்டவனுக்கு, அவனை இவன் அழைத்தால், (அவனுக்குப்) பதிலளித்து, மேலும், (அவனுடைய) அத்துன்பத்தை நீக்கி, பூமியில் உங்களை(த் தன்னுடைய) பிரதிநிதிகளாகவும் ஆக்கியவ(ன் சிறந்தவ)னா ? (இத்தகைய) அல்லாஹ்வுடன், வேறு வணக்கத்திற்குரியவன் இருக்கின்றானா ? (இல்லை !) நீங்கள் சிந்திப்பது மிகக் குறைவாகும்.

63. (உங்களுடைய தெய்வங்கள் சிறந்தவையா ?) அல்லது கரையிலும், கடலிலும் உள்ள இருள்களில் உங்களுக்கு நேர்வழி காண்பித்து,(மழையெனும்) அவனுடைய அருள் மாரிக்கு முன்னதாகக் காற்றுகளையும் நன்மாராயமாக அனுப்பி வைப்பவ(ன் சிறந்தவ)னா? (இத்தகுதிகளுடைய) அல்லாஹ்வுடன் வேறு வணக்கத்திற்குரியவன் இருக்கின்றானா? (இல்லை!) அவர்கள் இணை வைப்பவைகளை விட்டும் அல்லாஹ் மிக்க உயர்ந்தவன்.

64.(உங்களுடைய தெய்வங்கள் சிறந்தவையா ?) அல்லது ஆரம்பத்தில் (யாதொரு முன்மாதிரியும் இன்றியே) படைப்பைத்துவங்கி, பின்னர் அதனை மீட்டுபவனும், வானத்திலிருந்தும், பூமியிலிருந்தும் உங்களுக்கு உணவளிப்பவ(ன் சிறந்தவ)னா? அல்லாஹ்வுடன், வேறு வணக்கத்திற்குரியவன் இருக்கின்றானா? "நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், (இதற்கு) உங்களுடைய அத்தாட்சியைக் கொண்டுவாருங்கள்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

65. அல்லாஹ்வைத் தவிர வானங்களிலும் பூமியிலும் உள்ளவர்கள்(எவரும்) மறைந்திருப்பவைகளை அறியமாட்டார்கள்; மேலும், அவர்கள் எப்பொழுது (உயிர் கொடுத்து)எழுப்பப்படுவார்கள் என்பதையும் அவர்கள் உணரமாட்டார்கள்" என்று (நபியே!)நீர் கூறுவீராக!

66. எனினும், மறுமையைப் பற்றிய இவர்களுடைய அறிவோ (களைப்புற்றுக்கீழ் நிலை அடைந்து) முடிவுபெற்றுவிட்டது; மாறாக அதுபற்றி இவர்கள்( பெரும்) சந்தேகத்தில் இருக்கின்றனர்; இல்லை! அதைப்பற்றி இவர்கள் குருடர்களாகவே இருக்கிறார்கள்.

وَقَالَ الَّذِيْنَ كَفَرُوْٓا ءَاِذَا كُنَّا تُرٰبًا وَّاٰبَآؤُنَآ اَئِنَّا
لَمُخْرَجُوْنَ ﴿۶۷﴾ لَقَدْ وُعِدْنَا هٰذَا نَحْنُ وَاٰبَآؤُنَا مِنْ
قَبْلُ ۙ اِنْ هٰذَآ اِلَّآ اَسَاطِيْرُ الْاَوَّلِيْنَ ﴿۶۸﴾ قُلْ سِيْرُوْا
فِى الْاَرْضِ فَانْظُرُوْا كَيْفَ كَانَ عَاقِبَةُ الْمُجْرِمِيْنَ ﴿۶۹﴾
وَلَا تَحْزَنْ عَلَيْهِمْ وَلَا تَكُنْ فِىْ ضَيْقٍ مِّمَّا يَمْكُرُوْنَ ﴿۷۰﴾
وَيَقُوْلُوْنَ مَتٰى هٰذَا الْوَعْدُ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ﴿۷۱﴾ قُلْ
عَسٰٓى اَنْ يَّكُوْنَ رَدِفَ لَكُمْ بَعْضُ الَّذِىْ تَسْتَعْجِلُوْنَ ﴿۷۲﴾
وَاِنَّ رَبَّكَ لَذُوْ فَضْلٍ عَلَى النَّاسِ وَلٰكِنَّ اَكْثَرَهُمْ لَا
يَشْكُرُوْنَ ﴿۷۳﴾ وَاِنَّ رَبَّكَ لَيَعْلَمُ مَا تُكِنُّ صُدُوْرُهُمْ وَمَا
يُعْلِنُوْنَ ﴿۷۴﴾ وَمَا مِنْ غَآئِبَةٍ فِى السَّمَآءِ وَالْاَرْضِ اِلَّا فِىْ
كِتٰبٍ مُّبِيْنٍ ﴿۷۵﴾ اِنَّ هٰذَا الْقُرْاٰنَ يَقُصُّ عَلٰى بَنِىْٓ
اِسْرَآءِيْلَ اَكْثَرَ الَّذِىْ هُمْ فِيْهِ يَخْتَلِفُوْنَ ﴿۷۶﴾ وَاِنَّهٗ
لَهُدًى وَّرَحْمَةٌ لِّلْمُؤْمِنِيْنَ ﴿۷۷﴾ اِنَّ رَبَّكَ
يَقْضِىْ بَيْنَهُمْ بِحُكْمِهٖ ۚ وَهُوَ الْعَزِيْزُ الْعَلِيْمُ ﴿۷۸﴾ ۚ
فَتَوَكَّلْ عَلَى اللّٰهِ ؕ اِنَّكَ عَلَى الْحَقِّ الْمُبِيْنِ ﴿۷۹﴾

67. "நாங்களும், எங்களுடைய மூதாதையர்களும் மண்ணாகிவிட்டால் நிச்சயமாக (மீண்டும் உயிர் பெற்று பூமியிலிருந்து) நாங்கள் வெளியேற்றப் படுவோர்களா?" என்று நிராகரிப்போர் கூறுகின்றனர்.

68. "நிச்சயமாக இதுபற்றி நாங்களும், இதற்கு முன்னர் எங்கள் மூதாதையர்களும் வாக்களிக்கப்பட்டிருந்தோம்; இது முன்னுள்ளோரின் கட்டுக்கதைகளே தவிர (வேறு) இல்லை" (என்றும் கூறுகின்றனர்).

69. (ஆகவே,) "பூமியில் பிரயாணம் செய்து குற்றவாளிகளின் முடிவு எப்படி இருந்தது என்பதை (கவனித்துப்) பாருங்கள் என்று (நபியே!) நீர் கூறுவீராக!"

70. மேலும், (நபியே!) அவர்களுக்காக நீர் கவலை கொள்ளாதீர்; அவர்கள் செய்யும் சூழ்ச்சி பற்றி நீர் நெருக்கடியில் ஆகிவிடவும்வேண்டாம்.

71. இன்னும், "நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், (வேதனை வருமென்ற) இந்த வாக்கு எப்பொழுது வரும்?" என்று அவர்கள் கேட்கின்றார்கள்.

72. (அதற்கு) "நீங்கள் அவசரப்படுகின்றீர்களே அத்தகையவை சில (இப்பொழுதே) உங்களை வந்தடையக் கூடும் என்று (நபியே!) நீர் கூறுவீராக!

73. இன்னும், நிச்சயமாக உமதிரட்சகன் மனிதர்களின் மீது பேரருளுடையவன்; எனினும் அவர்களில் பெரும்பாலோர் நன்றி செலுத்துவதில்லை.

74. இன்னும், (நபியே!) நிச்சயமாக உமதிரட்சகன், அவர்களுடைய நெஞ்சங்கள் மறைத்துவைத்திருக்கின்றதையும், (அதற்கு மாறாக) அவர்கள் வெளிப்படுத்து கின்றதையும் நன்கறிவான்.

75. வானத்தில் மற்றும் பூமியில் மறைவாக இருப்பதிலிருந்து எதுவும், ("லவ்ஹுல் மஹ்ஃபூள்" என்னும் அவனுடைய) தெளிவான புத்தகத்தில்இருந்தே தவிர இல்லை.

76. நிச்சயமாக இந்தக் குர்ஆன், இஸ்ராயீலின் மக்களுக்கு எதில் அவர்கள் வேறுபட்டு(த் தர்க்கித்து)க் கொண்டிருக்கிறார்களோ அதில் பெரும்பாலானவற்றை விவரித்துக் கூறுகிறது.

77. இன்னும் நிச்சயமாக இ(ந்தக்குர்ஆனான)து, விசுவாசங்கொண்டோர்களுக்கு நேர்வழியாகவும், அருளாகவும் இருக்கின்றது.

78. நிச்சயமாக உமதிரட்சகன், தன் தீர்ப்பைக் கொண்டு அவர்களுக்கிடையில் (மறுமையில்) தீர்ப்பளிப்பான்; அவன்தான் (யாவரையும்) மிகைத்தவன், (யாவற்றையும்) நன்கறிகிறவன்.

79. ஆகவே (நபியே! உமது காரியங்களை அவனிடமே ஒப்படைத்து முழுமையாக) அல்லாஹ்வின் மீது நீர் நம்பிக்கை வைப்பீராக! நிச்சயமாக நீர் தெளிவான உண்மையின் மீது இருக்கின்றீர்.

اِنَّكَ لَا تُسْمِعُ الْمَوْتٰى وَلَا تُسْمِعُ الصُّمَّ الدُّعَآءَ اِذَا
وَلَّوْا مُدْبِرِيْنَ ﴿۸۰﴾ وَمَآ اَنْتَ بِهٰدِى الْعُمْىِ عَنْ ضَلٰلَتِهِمْ ؕ
اِنْ تُسْمِعُ اِلَّا مَنْ يُّؤْمِنُ بِاٰيٰتِنَا فَهُمْ مُّسْلِمُوْنَ ﴿۸۱﴾ وَ
اِذَا وَقَعَ الْقَوْلُ عَلَيْهِمْ اَخْرَجْنَا لَهُمْ دَآبَّةً مِّنَ الْاَرْضِ
تُكَلِّمُهُمْ ۙ اَنَّ النَّاسَ كَانُوْا بِاٰيٰتِنَا لَا يُوْقِنُوْنَ ﴿۸۲﴾ وَ ع ۶ ۱۶ ۲
يَوْمَ نَحْشُرُ مِنْ كُلِّ اُمَّةٍ فَوْجًا مِّمَّنْ يُّكَذِّبُ
بِاٰيٰتِنَا فَهُمْ يُوْزَعُوْنَ ﴿۸۳﴾ حَتّٰٓى اِذَا جَآءُوْ قَالَ اَكَذَّبْتُمْ
بِاٰيٰتِىْ وَلَمْ تُحِيْطُوْا بِهَا عِلْمًا اَمَّاذَا كُنْتُمْ تَعْمَلُوْنَ ﴿۸۴﴾
وَوَقَعَ الْقَوْلُ عَلَيْهِمْ بِمَا ظَلَمُوْا فَهُمْ لَا يَنْطِقُوْنَ ﴿۸۵﴾
اَلَمْ يَرَوْا اَنَّا جَعَلْنَا الَّيْلَ لِيَسْكُنُوْا فِيْهِ وَالنَّهَارَ مُبْصِرًا ؕ
اِنَّ فِىْ ذٰلِكَ لَاٰيٰتٍ لِّقَوْمٍ يُّؤْمِنُوْنَ ﴿۸۶﴾ وَيَوْمَ يُنْفَخُ
فِى الصُّوْرِ فَفَزِعَ مَنْ فِى السَّمٰوٰتِ وَمَنْ فِى الْاَرْضِ
اِلَّا مَنْ شَآءَ اللّٰهُ ؕ وَكُلٌّ اَتَوْهُ دٰخِرِيْنَ ﴿۸۷﴾ وَتَرَى الْجِبَالَ
تَحْسَبُهَا جَامِدَةً وَّهِىَ تَمُرُّ مَرَّ السَّحَابِ ؕ صُنْعَ اللّٰهِ
الَّذِىْٓ اَتْقَنَ كُلَّ شَىْءٍ ؕ اِنَّهٗ خَبِيْرٌۢ بِمَا تَفْعَلُوْنَ ﴿۸۸﴾

80. (நபியே!) நிச்சயமாக நீர் மரணித்தோரைச் செவியேற்கச் செய்யமாட்டீர்; (அது உம்மால் முடியாது) மேலும், செவிடர்களுக்கும் — அவர்கள் புறங்காட்டியவர்களாக திரும்பிச்சென்றால் (உம்முடைய) அழைப்பை நீர் செவியேற்கச் செய்யமாட்டீர்.

81. குருடர்களுக்கு — அவர்களுடைய வழிகேட்டை விட்டும் (நீக்கி) நேர்வழி காட்டுபவராகவும் நீர் இல்லை; நம்முடைய வசனங்களைக்கொண்டு விசுவாசம் கொள்கிறவரைத்தவிர (வேறெவரையும்) நீர் (அவற்றைச்) செவியுறச் செய்ய முடியாது; அவர்கள் (முற்றிலும்) கீழ்ப்படிந்து நடப்பவர்கள்.

82. (இறுதி நாளைப் பற்றிய நம்முடைய) கூற்று அவர்கள் மீது நிகழ்ந்தும்விட்டால், அவர்களுக்காகப் பூமியிலிருந்து ஒரு பிராணியை நாம் வெளிப்படுத்துவோம்; நிச்சயமாக மனிதர்கள், நம்முடைய வசனங்களை உறுதி கொள்ளாதவர்களாக இருந்தார்கள் என்று அது அவர்களிடம் (தெளிவாகப்) பேசும்.

83. ஒவ்வொரு சமுதாயத்திலிருந்து நம்முடைய வசனங்களைப் பொய்யாக்கிக் கொண்டிருந்தவர்களை, ஒரு படையாக நாம் ஒன்றுதிரட்டும் நாளை (நபியே நீர் நினைவுகூர்வீராக!) பின்னர் (மஹ்ஷர் மைதானத்தின் பால் செல்லும்போது அவர்களில் முன்னுள்ளவர்களுடன் அவர்களில் பின்னுள்ளவர்கள் சேர்ந்து கொள்வதற்காக) அவர்கள் நிறுத்திவைக்கப்படுவர்.

84. முடிவாக — அவர்கள் (யாவரும் தங்கள் இரட்சகனிடம்) வந்து விடுவார்களானால், (அவர்களிடம்) "நீங்கள் என்னுடைய வசனங்களை — அவற்றை முழுமையாக நீங்கள் அறிந்து கொள்ளாமல் இருந்தும் பொய்யாக்கிக் கொண்டிருந்தீர்களா? அல்லது என்னதான் நீங்கள் செய்துகொண்டிருந்தீர்கள்?" என்று (அல்லாஹ்வாகிய) அவன் கேட்பான்.

85. மேலும், அவர்கள் அநியாயம் செய்து கொண்டிருந்ததன் காரணமாக அவர்கள் மீது (தண்டனையைப் பற்றிய) கூற்று ஏற்பட்டுவிட்டது; ஆகவே, அவர்கள் பேசமாட்டார்கள்.

86. நிச்சயமாக நாம் இரவை, அதில் அவர்கள் அமைதி பெறுவதற்காகவும், பகலை (யாவற்றையும்) நன்கு பார்ப்பதற்காகவும் நாமே ஆக்கினோம் என்பதை அவர்கள் பார்க்கவில்லையா? நிச்சயமாக இதில் விசுவாசங்கொண்ட சமூகத்தார்க்குப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன.

87. ஸூர் (குழல்) ஊதப்படும் நாளில், அல்லாஹ் (காப்பாற்ற) நாடியவர்களைத் தவிர வானங்களிலுள்ளவர்களும், பூமியிலுள்ளவர்களும் திடுக்கிட்டு விடுவார்கள்; ஒவ்வொருவரும் பணிந்தவர்களாக அவனிடம் வந்து விடுவர்

88. மேலும், நீர் மலைகளை — அவைகளைத் திடமானவையாக (அசையாததாக) நீர் எண்ணுகிறீர் — (எனினும் அந்நாளின்போது) அவை மேகம் நகர்வது போல் நகர்வதை நீர் காண்பீர்; ஒவ்வொரு பொருளையும் (படைத்து,) உறுதியாக ஒழுங்குபடுத்திய, அல்லாஹ்வுடைய (கலைத்திறன் நிறைந்த) செயலாக (அவ்வாறு நடைபெறும்.) நிச்சயமாக அவன், நீங்கள் செய்துகொண்டிருப்பவற்றை நன்கு உணர்பவன்.

مَنْ جَآءَ بِالْحَسَنَةِ فَلَهٗ خَيْرٌ مِّنْهَا ۚ وَهُمْ مِّنْ فَزَعٍ يَّوْمَئِذٍ
اٰمِنُوْنَ ﴿٨٩﴾ وَمَنْ جَآءَ بِالسَّيِّئَةِ فَكُبَّتْ وُجُوْهُهُمْ فِي النَّارِ ۭ هَلْ
تُجْزَوْنَ اِلَّا مَا كُنْتُمْ تَعْمَلُوْنَ ﴿٩٠﴾ اِنَّمَآ اُمِرْتُ اَنْ اَعْبُدَ رَبَّ هٰذِهِ
الْبَلْدَةِ الَّذِيْ حَرَّمَهَا وَلَهٗ كُلُّ شَيْءٍ ۡ وَّاُمِرْتُ اَنْ اَكُوْنَ مِنَ
الْمُسْلِمِيْنَ ﴿٩١﴾ وَاَنْ اَتْلُوَا الْقُرْاٰنَ ۚ فَمَنِ اهْتَدٰى فَاِنَّمَا يَهْتَدِيْ لِنَفْسِهٖ ۚ
وَمَنْ ضَلَّ فَقُلْ اِنَّمَآ اَنَا مِنَ الْمُنْذِرِيْنَ ﴿٩٢﴾ وَقُلِ الْحَمْدُ لِلّٰهِ
سَيُرِيْكُمْ اٰيٰتِهٖ فَتَعْرِفُوْنَهَا ۭ وَمَا رَبُّكَ بِغَافِلٍ عَمَّا تَعْمَلُوْنَ ﴿٩٣﴾ ع ٤ ١١ ٣

## سُوْرَةُ الْقَصَصِ مَكِّيَّةٌ وَّهِيَ ثَمَانٍ وَّثَمَانُوْنَ اٰيَةً وَّتِسْعُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

طٰسٓمّٓ ﴿١﴾ تِلْكَ اٰيٰتُ الْكِتٰبِ الْمُبِيْنِ ﴿٢﴾ نَتْلُوْا عَلَيْكَ مِنْ نَّبَاِ
مُوْسٰى وَفِرْعَوْنَ بِالْحَقِّ لِقَوْمٍ يُّؤْمِنُوْنَ ﴿٣﴾ اِنَّ فِرْعَوْنَ
عَلَا فِي الْاَرْضِ وَجَعَلَ اَهْلَهَا شِيَعًا يَّسْتَضْعِفُ طَآئِفَةً
مِّنْهُمْ يُذَبِّحُ اَبْنَآءَهُمْ وَيَسْتَحْيٖ نِسَآءَهُمْ ۭ اِنَّهٗ كَانَ مِنَ
الْمُفْسِدِيْنَ ﴿٤﴾ وَنُرِيْدُ اَنْ نَّمُنَّ عَلَى الَّذِيْنَ اسْتُضْعِفُوْا
فِي الْاَرْضِ وَنَجْعَلَهُمْ اَئِمَّةً وَّنَجْعَلَهُمُ الْوٰرِثِيْنَ ﴿٥﴾ لا

89. எவர் ஒரு நன்மையைக் கொண்டு வந்தாரோ, அதைவிட மிகச் சிறந்த(கூலியான)து அவருக்கு உண்டு; மேலும், (அவ்வாறு செய்யும்) அவர்கள் அந்நாளின் திடுக்கத்திலிருந்து அச்சமற்றவர்கள்.

90. மேலும், எவர் ஒரு தீமையைக்கொண்டு வந்தாரோ, அவர்களுடைய முகங்கள் நரகத்தில் குப்புறத்தள்ளப்படும்; நீங்கள் செய்து கொண்டிருந்தவைகளுக்கன்றி (வேறு எதற்கும்)கூலி கொடுக்கப்படுகிறீர்களா ?(என்று கேட்கப்படுவர்.)

91. "நான் கட்டளையிடப்பட்டதெல்லாம் (மக்காவாகிய) இந்த ஊரின் இரட்சகனை நான் வணங்குவதைத்தான்; அவன் எத்தகையவனென்றால், இதை அவன் புனிதமாக்கிவைத்துள்ளான்; ஒவ்வொரு பொருளும் அவனுக்கே உரியது! இன்னும், அவனுக்கே முற்றிலும் கீழ்ப்படிந்தவர்களில் உள்ளவனாக (முஸ்லிமாக) இருக்குமாறும் நான் ஏவப்பட்டுள்ளேன்"(என்று நபியே! நீர் கூறுவீராக!).

92. "அன்றியும்,குர்ஆனை நான் ஓதிக்கொண்டிருக்குமாறும்(ஏவப்பட்டுள்ளேன். அதனைக் கொண்டு) எவர் நேர் வழியை அடைகின்றாரோ அவர் நேர்வழியடைவதெல்லாம் அவருக்கே(தன் சுய நன்மைக்காகவே) ஆகும்; இன்னும் எவர் (இதிலிருந்து)வழி தவறி விடுகிறாரோ நிச்சயமாக நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர்களில் உள்ளவனே" என்று கூறுவீராக!

93. மேலும், "புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது; தன்னுடைய அத்தாட்சிகளை அடுத்து அவன் உங்களுக்குக் காண்பிப்பான்; அது சமயம் அவைகளை நீங்கள் ( உண்மையென) அறிந்து கொள்வீர்கள்" என்று (நபியே!) நீர் கூறுவீராக! மேலும், நீங்கள் செய்துகொண்டிருப்பவற்றைப் பற்றி (நபியே!) உமதிரட்சகன் பராமுகமானவனாக இல்லை.

---

அத்தியாயம் : 28

## அல் கஸஸ் _ சரித்திரம்

வசனங்கள் : 88 மக்கீ ருகூஃகள் : 9

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. தா ஸீம் மீம்.

2. (நபியே!) இவைதெளிவான இவ்வேத வசனங்களாகும்.

3. (நபியே!) விசுவாசங்கொள்ளும் கூட்டத்தாருக்காக மூஸா, ஃபிர்அவ்னுடைய செய்தியை உண்மையைக் கொண்டு உமக்கு நாம் ஓதிக் காண்பிக்கிறோம்.

4. நிச்சயமாக ஃபிர்அவ்ன் பூமியில் (மிகவும்) பெருமை கொண்டு, அதிலுள்ளவர்களைப் பல பிரிவினர்களாக்கி, அவர்களில் ஒரு பிரிவினரைப் பலவீனப்படுத்தினான்; அவர்களுடைய ஆண் மக்களை அறுத்(துக் கொலை செய்)தான்; மேலும் அவர்களின் பெண் மக்களை (உயிருடன் வாழ) விட்டுவைத்தான்; நிச்சயமாக அவன் குழப்பம் செய்பவர்களில் (உள்ளவனாக) இருந்தான்.

5. (எகிப்திய) பூமியில் அவனால் பலவீனப்படுத்தப்பட்டோர் மீது நாம் உபகாரம் செய்யவும், அவர்களைத் தலைவர்களாக நாம் ஆக்கிவைக்கவும்,(கொடுமை செய்தோரான பலசாலிகளின் உடமைகளுக்கு)அவர்களை வாரிசுகளாக நாம் ஆக்கிவைக்கவும் நாடினோம்.